# <u>Chapter - 15 - Speech for 08th October 2022 – 2</u>

கடந்த பத்து பதினைந்து நாட்கள் தொழில் தொடர்பான வேலைகள், பயணங்கள் அதிகம் என்பதால் அடுத்த அத்தியாயத்தை பற்றி பகிர்ந்து கொள்வதற்கு அதற்கான notes களை எழுத நேரம் கிடைக்கவில்லை. சென்ற கூடலில் CAUSALITY பற்றி பகிர்ந்துக் கொண்டேன். அதை பற்றி விதி என்னும் பார்வையில் கர்மயோகி சில விஷயங்களை எழுதியிருக்கிறார். அதை இன்று பகிர்ந்துக் கொள்கிறேன். அடுத்த கூடலில் அடுத்த அத்தியாயமான பதினாறாவது அத்தியாயத்தை எடுத்துக் கொள்ளலாம்.

விதி பற்றி பேசும் போது, CAUSALITY காரண காரியம் தளத்தை உருவாக்கினால், ஆன்மாவின் பண்புகள் மூலம் வாழ்வு தரும் மறுமொழியை மாற்ற முடியும். விதியை மதியால் வெல்லலாம் என்றும், ஆன்மாவால் வாழ்வை மாற்ற முடியும் என்பதன் அடிப்படையில் கர்மயோகி எழுதியவற்றை இன்று எடுத்துக் கொள்கிறேன்.

இதை பற்றி பேசும் போது, ஒரு அன்பர் விதியை மதியால் வெல்லலாம் என்பது ஆன்மாவால் மாற்றலாம் என்பதை விட வலிமையாக உள்ளது போல உள்ளதே என்றார். அப்படி யாருக்காவது தோன்றினால் அதற்கு கர்மயோகி தரும் விளக்கம் - சாதாரண பள்ளிகளில் SYSTEMATICஆக இல்லாத பள்ளிகள், பாடம் எடுக்கும் முறை ORGANIZEஆக இல்லாத பள்ளிகள், அல்லது சில அரசு பள்ளிகளில் சேர்ந்தால் PASS அல்லது FAIL என்பது உண்டு. ஆனால் SYSTEMATICஆக ORGANIZEஆக கவனத்தை குவிக்கும், நாமக்கல், திருப்பூர், ஈரோடு போன்ற இடங்களில் இருக்கும் பள்ளிகளில் PASS அல்லது FAIL என்பது கிடையாது. 96% ஆ , 98%ஆ, 100 ஆ , STATE FIRST ஆ, SECOND ஆ , ALL INDIA FIRST ஆ, SECOND ஆ என்றே இருக்கும். இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் என்னவோ அது தான் விதியை மதியால் வெல்லலாம் என்பதற்கும், வாழ்வின் மறுமொழியை ஆன்மாவால் மாற்றலாம் என்பதற்கும் உள்ள வித்தியாசம் என்கிறார்.

நமது மரபில் அல்லது பாரம்பரிய வழிபாடு முறைகளில் கர்மவினைக்கு தீர்வு இல்லை என்பது உண்மை. ஆனால் ஸ்ரீ அரவிந்தர் கூறும் ஆன்மீக உண்மை என்னவென்றால், இந்த பிரபஞ்சம், அடிப்படையில் சித் சக்தியால் தோற்றுவிக்கப்பட்டது, தன் REAL IDEAவுக்காக அதுதான் ஒருவருடைய கடந்த கால கர்ம வினைகளை சேகரித்து வைக்கிறது. அதன் அடிப்படையில் ஒரு படைப்பில், அதாவது ஒரு பிறப்பில் பெற வேண்டிய ஆனந்தத்தை அது முடிவு செய்கிறது. ஆனால் சத்திய சித்தமாக மாறும் வரை அதற்கு பகுக்க முடியாத

நிலை இருப்பதால், அதனால் அதற்கு ஆனந்தமோ துன்பமோ இல்லை. சத்திய சித்தமும் முழுமையை உணர்ந்த நிலையில், அதற்கும் ஆனந்தமோ துன்பமோ இல்லை. உண்மையில் எல்லாவற்றையும் ஆனந்தமாகவே அது எடுத்துக் கொள்கிறது. அதன் பிரதிநிதியாக நாம் ஆன்மாவை எடுத்துக் கொள்வதால், கர்மா ஆன்மாவை கட்டுப்படுத்துவதில்லை என்று எடுத்துக் கொள்ளலாம். அதாவது ஆன்மாவும் அதன் பண்புகளும் காலத்தை கடந்து நிற்பது. அதனால் அதற்கு காரண காரியம் கிடையாது.

சென்ற கூடலில் சொன்ன துபாய் ENGINEER உதாரணத்தை எடுத்துக் கொண்டால், அயல் நாட்டில் சம்பளம் இல்லாமல், வேலை செய்து கஷடப்பட வேண்டும் என்பது அவருக்கு விதி என்றால், அவர் எடுத்துக் கொண்ட பண்பால், அது ஆனந்தமாக மாறியது. இரண்டு ஆண்டுகளில் நடக்க வேண்டிய விஷயங்கள் ஆறு மாதத்தில் நடந்தது. கடந்த கால சமர்பணத்தின் போது நாம் ஆன்மாவிற்கு, அன்னைக்கு சமர்ப்பணம் செய்யும் போது காலம், நேரம், முடிவுகள் என்று எதற்கும் ஒரு பொருள், நியதி இல்லாமல் அனைத்தும் மாறுகிறது. அதாவது ஆன்மா விரும்பும் ஒரு பண்பு, பரிணாம வளர்ச்சிக்கு உரிய ஒரு மனப்பான்மை, காலத்தை கடந்த நிலை என்பதால் அது காலத்தின் மேல் செயல்படும் போது கர்மம் கரைகிறது என்பது பொருள், அதன் பின்னால் உள்ள பரிணாம வளர்ச்சி அல்லது அதற்கு பின் உள்ள சத்திய சித்தத்தின் காரணம், மனமும், வாழ்வும் ஒரு MOVEMENTஇல் சிந்திக்க வேண்டும் என்பது தான. அதற்கு தன்னையறியும், தன் இருப்பை அறியும் திறன் வளர்வதாகப் பொருள். காலம் அகத்தில் சிருஷ்டித்ததை, இடம் புறத்தில் செயல்படுத்துவதை நாம் காரண காரியம் என்கிறோம். இதை உண்மையில் சித்சக்தி, சத்திய சித்தம், ஞானம், உறுதி என்று அனைத்தும் சேர்ந்து உருவாக்குவதால், இது இறைவனின் சட்டம். மனம் இந்த சட்டத்தை புரிந்துக் கொள்ள முடியாது என்பதால், ஆன்மாவின் பண்புகளை நோக்கிய மனமாற்றம் சத்திய சித்த தளத்தை காரண காரிய தளமாக மாற்றுகிறது. அகம் புறமாகும் முதல் கட்டம் இது என்று கூறுகிறார். இன்னும் விளக்கமாக கூற வேண்டும் என்றால், மனம் இறைவனிடமிருந்து, ஆன்மாவிடம் இருந்து பிரிந்ததே வாழ்க்கையில் இருக்கும் பிரச்சினைகள் அனைத்திற்கும் காரணம். தானும் இறைவனும் ஒன்று அல்லது இறைவன் நம் முன்னே தான் இருக்கிறான் என்று நினைத்தவுடன் பிரச்சினைகள் மறையும் என்கிறார். அப்படி பார்க்கும் போது இந்த பிரபஞ்சம் இயங்குவதற்கு அடிப்படை - ஒரு செயல் செய்யப்படுகிறது, அதன் விளைவுகள் நிகழ்வுகளாக மாறுகிறது. அதன் தாக்கம் நம் மனதில், உணர்வில்,உடலில் செயல்படுவதற்கு ஏற்ப நம் வாழ்வு நடத்தப்படுகிறது. CAUSALITY AND ITS RESPONSE TO THE PART OF THE BEING .

இது வாழ்வின் அடிப்படை தத்துவம். அது எதன் அடிப்படையில் இருக்கிறது என்றால், பரிணாமத்தில் முன்னேற்றம் என்னும் அடிப்படையில், புல் முதல் தாவரம், விலங்கு, மனிதன் என்பது வரை, இலை, தழை, உடையில் இருந்து இன்றைய FASHION நாகரிகம் வரை அடுத்த வீட்டிற்கு கூட போய் தான் சொல்ல வேண்டும் என்ற நிலை மாறி ஆயிரக்கணக்கான கிலோமீட்டர் தள்ளி இருப்பவரிடம் கூட உடனடியாக பேச முடிவது வரை எந்த செயலும், எந்த படைத்தலும், ஒரு முன்னேற்றத்தை நோக்கியே இருக்கிறது. அதற்கும் அடிப்படை என்னவென்று பார்த்தால்  நாம் ஒரு ஆனந்தத்தை தேடி போய்க் கொண்டு இருக்கிறோம். ஆனால் எது ஆனந்தம் என்பதில் ஒரு குழப்பம் இருக்கிறது. பெரும்பாலானோரின் எண்ணங்களை எடுத்துக் கொண்டால், எல்லாம் நம் இஷ்டத்திற்கு நடந்தால் ஆனந்தம் என்றே இருக்கிறோம். குறைந்த பட்சம் அது நம் ஆர்வம், தனித்தன்மை ஆகியவற்றை ஒட்டியதாக இருந்தால் அதுவே ஆனந்தம் என்னும் நிலைக்கு நாம் முதலில் வரவேண்டும். அதாவது நம் செயல்கள், நம் aspiration மற்றும் INDIVIDUALITY ஐ ஒட்டி இருக்க வேண்டும். அது நம் ஆன்மாவை, அது விரும்பும் பண்புகளை வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும். இது நாம் எடுக்க வேண்டிய முதல் பரிணாம முயற்சி.

FUNDAMENTALLY, THE PERSONALITY MUST CONTINUOUSLY EVOLVE AS AN ORGANISATION FOR SELF-EXPRESSION OF THE SOUL AND SPIRIT WITHIN US என்கிறார் கர்மயோகி. நம் ஆன்மா விரும்புவதை நம்மளவில்  நாம் வெளிப்படுத்த முடிந்தால், அதை ORGANIZED ஆக வெளிபடுத்த முடிந்தால், அது தான் உண்மையான ஆனந்தத்தை தரும் என்கிறார். ஆனால் உண்மையில் நாம் வெளிப்படுத்தும் செயல்கள் எல்லாம் நம் விருப்பம் தானா, நம் பண்புகளை நம் தனித்தன்மையை  வெளிப்படுத்த தான் செய்கிறோமா? மற்றவர்களுக்காக செய்கிறோம். உறவினர்கள், நண்பர்கள் திருப்திக்கு, சமுதாயத்தின் திருப்திக்கு என்று தான் பலவற்றை செய்கிறோம். அதை போல நம் ஆனந்தமோ அல்லது பிறரின் ஆனந்தமோ நாம் விரும்பும் வழியில் தான் வர வேண்டும் என்று இருக்கிறோம்.

உதாரணமாக RESTAURANTக்கு மனைவி குழந்தைகளை அழைத்துச் செல்வோம். அவர்கள் சந்தோஷம் தான் முக்கியம் என்றாலும், உண்மையில் அவர்களுக்கான சுதந்திரத்தை தரமாட்டோம். குழந்தை STRAWBERRY ICECREAM கேட்டால், அது நன்றாக இருக்காது CHOCOATE ICECREAM வாங்கிக்கொள் என்போம், HOBBY ,SCHOOL , SUBJECT என்று எல்லாவற்றிலும் நாம் நினைத்தவகையில் தான் அவர்களின் ஆனந்தம் இருக்க வேண்டும் என்றே இருப்போம். இதையே தான் மற்றவர்கள் நமக்கும் செய்கிறார்கள். ஆனால்

நமக்கு கோபம் வருகிறது. நம் விதி என்று நினைக்கிறோம். இதையெல்லாம் கர்மம் என்னும் வார்த்தைக்குள் பொருத்திப் பார்க்காமல், வாழ்வின் விதி - rule of life என்னும் அளவில் பார்த்தால், நாம் ஒவ்வொன்றுக்கும் ஒரு FORMULA, RULE, OPINION வைத்திருப்பது தெரியும். அதை ஒட்டியே சமூகமும், வாழ்வும், நம்மை சுற்றியுள்ளவர்கலும், சூழலும் வைத்து இருப்பது தெரியும். அவற்றை உடைப்பது கரம்மத்தை உடைப்பது. CAUSE AND EFFECT என்பது ஆன்மீக அடிப்படையின் படி ஒவ்வொரு செயலுக்கும் பலன் உண்டு என்னும் நியதி. நல்ல செயல்கள் புண்ணியத்தையும், தவறான செயல்கள் பாவத்தையும் கொடுக்கின்றன. புண்ணியம் என்பது ஆனந்தத்தை கொடுப்பதாக நாம் நினைப்பதால் அவற்றைப் பற்றி நாம் பேசுவதில்லை. நாம் கர்மம் என்று குறிப்பிடுவது நம் முந்தைய செயல்கள் இப்போது விரும்பத்தகாத பலனை, துன்பத்தை தரும் போது மட்டுமே அவற்றை கர்மம், விதி என்று கூறுகிறோம். பொய் பேசுபவன் மறுபிறப்பில் ஊமையாகிறான், பிறருக்கு எதுவும் தராதவன் மறுபிறவியில் தரித்திரனாக எல்லாவற்றையும் கேட்டுப் பெரும் பிச்சைக்காரனாக மாறுகிறான், இன்று குளங்களை தூர்ப்பவன் மறு பிறவியில் மீனாக, தவளையாக பிறக்கிறான் என்று பலவற்றை நம் சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஒவ்வொரு செயலுக்கும் இப்பிறவியிலோ, மறுபிறவியிலோ என்ன பலனைக் கொடுக்கும் என்பது பல நூல்களில் தெளிவாக கூறப்பட்டுள்ளது.

நம் வாழ்க்கை செயல்களால் அமைந்தது. ஆனால் எல்லா செயல்களுக்கும் உடனே பலன் கிடைப்பதில்லை. நல்ல சமையல் செய்தால் அதை உடனே சாப்பிட்டு அனுபவிக்கலாம். ஆனால் நெல்லை விதைத்தால் பலனை பெறுவதற்கு பல மாதம் காத்திருக்க வேண்டும். ஆரோக்கியத்தை புறக்கனித்தால், பல ஆண்டுகளுக்கு பின்னரே பலன் தெரியும். ஆனால் கெட்டுப் போன பழம், உணவு சாப்பிட்டால், ஆரோக்கியம் உடனே கெடும், உடல் கெடும், ஜுரம், வாந்தி வரும். செல்வாக்குள்ளவர் தவறு செய்தால், பயத்தின் காரணமாக அவரை யாரும் தட்டிக் கேட்பதில்லை. ஒரு காலத்தில் அவர் செல்வாக்கு போய்விட்டால், அவரால் கொடுமைக்கு ஆளானவர்கள் மொத்த பெரும் சேர்ந்து வருவார்கள். இதையெல்லாம் நம் கண்ணெதிரே நடந்தாலும் நாம் கவனிப்பதில்லை. ஆராய்ந்து பார்ப்பது இல்லை. செல்வம், செல்வாக்கு அத்தகைய மனிதர்களை சிறிது காலம் காப்பாற்றியதை போல நம் அறியாமை, பொய்மை ஆகியவற்றை அடிப்படையாக கொண்ட செயல்கள் நம் மேல்மன திறமையால், திறனால் சில காலம் காப்பாற்றப்படலாம். அது போல ஆரோக்கியம், செல்வம், குடிபிறப்பு, அந்தஸ்து, சாதி பலம், முற்பிறவி புண்ணியம், அறிவு, ஆற்றல் உற்றார்,

ஊரார் தொடர்பு என்று மனிதனுக்கு பல வகையான பலம் இருப்பதால், அவன் செய்யும் காரியங்களில் உள்ள நல்லது கெட்டதை அவன் நினைத்தும் பார்ப்பதில்லை. அது தரும் பலன்களை ஆராய்வதில்லை. நம்முடைய ஒரு 10அல்லது 20 ஆண்டு வாழ்வை எடுத்து பார்த்தால், நல்ல பண்புகளுடன் கூடிய செயல்களே, உயர்ந்த மனப்பான்மையுடனோ, முன்னேற்றத்திற்கான மனப்பான்மையுடனோ செய்த செயல்களே நல்ல பலன்கள், நிரந்தர பலன்களை, தொடர் ஆனந்தத்தை தந்த செயல்களாக இருப்பதைக் காண முடியும்.

இதையெல்லாம் படிக்கும் போது, கேட்கும் போது ஏராளமான கேள்விகள் வருகிறது. யாரெல்லாம் மீண்டும் பிறக்கிறார்கள், நம் இந்த பிறவி, போன பிறவி செயல்கள் பிற்காலத்தில் நம்மை, நம் செயல்களை பாதிக்குமா. சிறுவயதில் கேட்ட ஒரு விஷயம் ஞாபகத்திற்கு வருகிறது. ஒரு மாணவன் ஒரு கரப்பான் பூச்சியைத் துன்புறுத்திக் கொண்டு இருந்தான். ஆசிரியர் அதை பார்த்து அப்படி செய்தால் அடுத்த பிறவியில் அது உன்னை இதே போல துன்புறுத்தும் செய்யாதே என்றார். அதற்கு அந்த மாணவன் இல்லை சார், இந்த கரப்பான் பூச்சி தான் போன பிறவியில் என்னை கொடுமைப்படுத்தியது. பதிலுக்கு நான் இப்போது அதை துன்புறுத்துகிறேன் என்றான். கண்ணுக்கு கண், பல்லுக்கு பல் என்று பழிவாங்கும் அளவிற்கு இறைவன் கொடூரமானவனா என்ற கேள்வி எழுகிறது. சரி, போன பிறவியில் தவறு செய்துவிட்டதாக வைத்துக் கொள்வோம், அதை திருத்தி கொள்ள சந்தர்ப்பமே கொடுக்காமல், அல்லது ஞாபகம் கூட இல்லாமலிருக்கும் போது அதற்கு தண்டனை கொடுக்கும் அளவிற்கு இறைவன் கொடூரமானவனா?

நல்லவர்கள் என்று நாம் நினைப்பவர்கள் துன்பப்படுவதும், கெட்டவர்கள் என்று நாம் நினைப்பவர்கள் நன்றாக வாழ்வதும் ஏன் என்பது போன்ற ஏராளமான கேள்விகள் எழுகின்றன.  இவை எல்லாவற்றிற்கும் முழு விளக்கத்தை பகவான் Life Divine இரண்டாவது பாகம் chapter 22இல் தருகிறார். அதற்கான சாரமாக, அதில் இருந்து வெளியே வரும் வழியாக, கர்மயோகி கூறுவது - எந்த நல்லது, கெட்டது, அதிர்ஷ்டம், பரிசு, தண்டனை என்றாலும் அது இந்த பிறவியில், ஒன்று அல்லது இரண்டு சுபாவத்தின் மூலமே வர முடியும். அதுவே ஆன்மாவின் விருப்பமாக இருக்கும். அதன் மூலம் அது பெற வேண்டிய ஞானமே, ஆனந்தத்தின் சாரமே அந்த சுபாவத்தில் ஒளிந்து இருக்கும். கர்மம் பலிப்பதற்கான சுபாவம் இல்லையென்றால், கர்மத்தின் விதி செயல்படுவதற்கான channel- வழி, instrument - கருவி இல்லையென்றால் அவற்றால் செயல்பட முடியாது.

உதாரணமாக என்னை எடுத்துக் கொண்டால் கடந்த 40 வருடங்களாக யாருக்காவது உதவி செய்ய போய் பிரச்சினைகளில் மாட்டிக் கொள்வதே இன்று வரை நடக்கிறது. எவ்வளவு உஷாராக இருந்தாலும்,  யாருக்கும், எதுவும், எந்த உதவியும் செய்யக் கூடாது என்று கவனமாக இருந்தாலும், சந்தர்ப்பமும் சூழ்நிலையும் எப்படியாவது என்னை உதவி செய்ய வைத்து விடுகிறது. சமீபத்தில் கூட, பல மாதங்கள் தவிர்த்த உதவியை அதன் விளைவுகளை பற்றி தெரிந்தால் கூட, நான் மதிக்கும் அந்த நபர், மிகவும் கெஞ்சி கேட்டதால் வேறு வழி இல்லாமல் செய்தேன். மாட்டிக் கொண்டேன்.

முதல் நிலையில் நம்மை, நம் அறிவு, அனுபவம் ஆற்றல் எல்லாம் காப்பாற்றுவது போல தோன்றினாலும் பிறகு சில நாட்கள் ,மாதங்கள் கழித்து அது தன் வேலையை காட்டாமல் இருப்பது இல்லை. அதன் பிறகு சமுதாயம், நண்பர்கள், உறவுகள் சில காலம் காப்பாற்றுகிறது. இவையெல்லாம் நாம் பெற வேண்டிய ஞானத்தை தள்ளித் தான் போடுகின்றன தவிர தடுக்கவில்லை என்பது காலம் கடந்தே புரிகிறது. இவற்றில் இருந்து முழுதும் வெளியே வரவேண்டும் என்றால், இந்த சுபாவத்தை முற்றிலும் தடை செய்ய வேண்டும் என்றால், நம் personality ஏ மாற வேண்டும். நாம் வாழ்வில், மனப்பான்மையில் முன்னேற தான், அத்தனையும் பரிணாம வளர்ச்சிக்குத்தான் இதெல்லாம் நடக்கிறது என்னும் ஞானம் முதலில் வரவேண்டும். அது புரிந்தால், அதற்கான உதவி, இறைவனின் பிரதிநிதி உள்ளேயே இருப்பது தெரியும். அதைத்தான் ஆன்மா என்கிறோம்.  அதை causal plane ஆக காரியமாற்றும் தளமாக நாம் வைத்துக் கொண்டால், அது இறைவனின் செயலாகிறது, சமர்ப்பனமான செயலாகிறது.

பலன் எதுவானாலும் அது இறைவனுடையதே, அவன் விரும்பியதே என்னும் மனப்பான்மையே அப்போது நம்மால் வளர்க்க முடியும். அது முதலில் விருப்பு வெறுப்பு இல்லாத பற்றற்ற நிலையாக மாறி, பின் ஆனந்தமாக மாறும். காரணம் அதில் நம் மனம், மனப்பான்மை இல்லாததால், அவற்றுக்கான துன்பமும் இன்பமும் அங்கு இல்லை. இறைவனுக்கான ஆனந்தம் மட்டுமே வெளிப்படுகிறது. ஆனால் நாம் அதை பயன்படுத்துவதே இல்லை. நம் முன்னேற்றம் எல்லாம் நம் குடும்பத்தின், சமூகத்தின், அதன் தாக்கம், வளர்ப்பு, கல்வி ஆகியவை தந்தது. அதன் உயர் நிலைகளுக்கு ஏற்ற இடத்தை நாம் பெற்று இருக்கிறோம். பண்பாடு, நடத்தை, நன்னெறி, ஆகியவற்றை தந்தது அவைகளே. இல்லையென்றால் காட்டுமிராண்டிகளாக இருப்போம். சூழலின் கட்டாயத்தால் வந்த PERSONALITY அது. அதாவது சமூகத்தின் சித்தம் நம் சித்தமாக  மாறியதால் வந்த முன்னேற்றம். அது CONSCIOUISNESS OF THE SOCEITY BECOMING AS OUR PERSONALITY . இதுவே இப்படி இருக்கும் போது

ஆன்மாவின் தாக்கத்தால் வரும் PERSONALTIY எப்படி பட்டதாக இருக்கும். அது CONSCIOUSNESS OF MOTHER BECOMING OUR PERSONALITY என்பதால் அங்கு முன்னேற்றம், வளம் மட்டுமே இருக்கும். அங்கு ஆனந்தம் மட்டுமே வெளிப்படும். காரணம், அவை இறைவன் விரும்பும் படைப்பாற்றல் கொண்ட பண்புகள். அது பற்றி இரு கூடலுக்கு முன், விரிவாக பேசி 3G, 3P, SHECAR என்னும் Acronym பற்றியும் விளக்கியிருந்தேன். உதாரணமாக ஒரு பிரச்சினையில் இருக்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். துன்பம் விலக பிரார்த்தனை செய்கிறோம்.பலன் கிடைத்ததாக கூறி மகிழ்கிறோம். ஆனால் அதன் பின் உள்ள வழி, பண்பு, CHANNEL OR VALUES எது என்பதை நாம் கவனிப்பதில்லை. அந்த நேரம், மனம், எண்ணம், தன்முனைப்பு மறைந்து அமைதி, SILENCE என்னும் ஆன்மாவின் பண்பு வரும் போது, ஆன்மா செயல்பட்டு, வாழ்விற்கு , மனதிற்கு ஒரு தீர்வை தந்து விடுகிறது. அதன் பொருள் நாம் மனம் விலகிய நிலையில் அமைதியில் எப்போதும் இருந்தால், எப்போதும் நம்மை ஆன்மாவே வழிநடத்தும், அல்லது அன்னையே வழி நடத்துவார் என்று அதனை புரிந்து கொண்டு மனப்பான்மை உயர வேண்டும்.

செயல், சக்தி, அதன் பலன்கள் எல்லாமே உடல் புரியும் செயலின் திறனில் மட்டும் இல்லை. மனநிலை, உணர்வு அறிவு, நோக்கம், ஆர்வம் என்று பல நிலைகளை ஒட்டியே ஒரு செயல் பலனைத் தருகிறது. என்னை பற்றி நான் கூறிய உதாரணங்களில் இவற்றை ஆராய்ந்து சொல்ல முடியும். என்றாலும் அடிக்கடி சொல்லிவிட்டதால் வேறு உதாரணங்களை கூறுகிறேன்.

சென்ற வரம் என் நண்பர் ஒருவர் trafic signal இல் ஏதோ ஒரு சிறு பிரச்சினைக்கு இன்னொருவரின் சட்டையை பிடிக்கும் அளவிற்கு சென்று விட்டார். பின், பின்னால் இருந்தவர் சமாதானபடுத்தி அழைத்து சென்று விட்டார். அவரே மாலையில் வேறு ஒரு signal லில் இருந்த போது பக்கத்தில் வேறு இருவருக்குள் பிரச்சினை வந்தது. இவருக்கு சம்பந்தமே இல்லை என்றாலும் அவர்கள் அடித்துக் க்கொண்டதில் ஒருவர் இவர் மேல் விழுந்து இவருக்கும் அடிப்பட்டது. இது நேரடியாக உடலுக்கு உடல் தரும் மறுமொழி.

அமெரிக்கா , ஜப்பானின் உறுதியை குலைக்க, ஜப்பான் மேல் குண்டு போட்டது. அதன் பிறகு இன்று வரை அமெரிக்கா ஜப்பானுக்கு மிகப் பெரிய மார்க்கெட்டாக இருக்கிறது. ஜப்பானை சார்ந்து இருப்பதை குறைக்க எவ்வளவோ முயற்சி எடுத்தும் ஒரு பத்து சதவிகிதம் தான் அமெரிக்காவால் குறைக்க முடிந்தது. இது உணர்வுக்கு உணர்வு தரும் மறுமொழி.

அதே போல இந்தியாவின் ஒற்றுமையை குலைக்க அறிவுபூர்வமாக சிந்தித்து இங்கிலாந்து, இந்திய கலாச்சாரத்தை பண்பாட்டை குலைப்பதன் மூலம் அதை அடைய முடியும் என்று நினைத்து, சாதித்தது. ஆனால் இன்று இங்கிலாந்து தன் காலாச்சார அடையாளத்தை இழந்து , இன்று 30% பேர் வேறு மதத்தவர் என்பது மட்டுமல்ல, அரசியல் மற்றும் அரசாங்க வேலைகள் என்று அனைத்திலும் அவர்களே பெரும்பாலும் என்னுமளவிற்கு ஆகிவிட்டனர். இது அறிவுக்கு அறிவு தரும் மறுமொழி.

இவற்றையெல்லாம், மற்றும் நம் வாழ்வில் நடந்தவற்றையெல்லாம், வெற்றி பெற்ற இடங்கள், தோல்வியுற்ற இடங்கள் எல்லாவற்றையும் இந்த பார்வையில் பார்த்தால், ஒரு செயலின் தேவையான பலனை பெற, நம் எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகி ஆனந்தம் பெற, வெறும் செயல்திறன் மட்டுமே போதாது - மனப்பான்மையின் பங்கு, சுபாவத்தின் பங்கு மிக அதிகம் என்பது புரிய வரும். ஒரு செயலின் வெற்றி தோல்வியை நம் அறிவைக் கொண்டு புரிந்து கொண்டதாக நினைக்கிறோம். ஆனால் உண்மையில் நாம் ஆராய்வது நம் அனுபவத்தையே. அதை பகுத்தறிவு என்று வேறு நினைக்கிறோம்.

ஆனால் உடல், உணர்வு, மனம் ஆகியவற்றை ஆன்மாவின் நோக்கில் ஆராய்வதை பரிணாமத்திற்கான அறிவு என்று எடுத்துக் கொள்ள வேண்டும். உண்மையில் அது ஞானம். கர்மம் என்பது விதி பலிக்க ஒரு அடிப்படை. சுபாவமே அதன் கருவி. பகுத்தறிவு அதை தடுக்கும் அல்லது குறைக்கும் கருவி. ஆனால் அதை ஆன்மாவின் நோக்கில் ஆராயும் போது நாம் பெறுவது ஞானம். அந்த இடத்தில் நாம் கர்மத்தின் பிடியில் இருந்து முற்றிலும் விடுபடுகிறோம் என்கிறார் அன்னை. அந்த இடத்தில் தான் அதிர்ஷ்டம் என்பது உருவாகிறது. அதாவது ஜாதகத்தில் கூறப்படும் கெட்ட பலன்கள் குறைவாகவும், கூறப்படும் நல்ல பலன்கள் அதிகமாகவும் நடக்கும் இடம்.

உதாரணமாக, என் ஜாதகத்தில் புதனோ அல்லது எந்த கிரகமோ மிக மோசமான நிலையில் இருப்பதால் எனக்கு படிப்பு வராது என்றார்கள் . NUMEROLOGY படி பெயர் மாற்றம் முதல் கடலூர் அருகே திருவேந்திபுரம் கோவிலில் அங்கப்ரதக்ஷணம் முதல் பல பரிகாரங்கள் செய்தேன். எதுவும் நடக்கவில்லை. படிப்பு ஏறவில்லை. ஆனால் 35 வயதில் முன்னேற்றத்தின் அவசியத்தை உணர்ந்து இனி படிப்பு இல்லாமல், அதாவது ஒரு degree கூட இல்லாமல் வாழ முடியாது என்னும் சத்தியத்தை, முழுமையை உணர்ந்து, அதை ஆன்மாவின் பார்வையில் பார்த்து, அதற்கான பண்புகளை - உதாரணமாக நான் ஆங்கிலம் படித்ததை எடுத்துக் கொண்டால் SINCERE ஆக

தினமும் HINDU PAPERஐ ஒவ்வொரு வரியையும் MOTHER என்று சொல்லி படித்தது போன்றவற்றை செய்ததால் கர்மம் செயல்படவில்லை. ஜாதகம் செயல்படவில்லை. சத்திய சித்தம் செயல்பட்டு ஒரு நிரந்தர ஆனந்தத்திற்கு வழி வகுத்தது. அதை தான் அன்னை - நீ முன்னேற விரும்பியவுடன் என் உதவியைப் பற்றி கவலைப்பட தேவையில்லை. அது என்றும் உன்னைத் தேடி வரும் என்கிறார். ஆனால் நாம் அவற்றை எல்லாம் கேட்க மாட்டோம், அன்னை சொல்வது மேல், சத்திய சித்தத்தின் மேல் நம்பிக்கை நமக்கு வருவதில்லை என்கிறார். அதற்கு உதாரணமாக கிருஷ்ணர் தருமரிடம் ஒரு பஞ்சாங்கப்படி 13 வருடம் என்பது 13 நாள் என்று வருகிறது அதன் படி செய், நீ விரைவில் விடுதலை அடைவாய் என்ற போது, கிருஷ்ணர் சொல்வதை கேட்காமல் அதில் இறை நியாயம் இருக்கலாம் என்று ஏற்றுக் கொள்ளாமல், தான் அறிந்த விஷயத்தையே உண்மையென்றும் அதை மாற்ற முடியாது என்றும் நம்பிய தருமனின் நிலையில் தான் நாம் இருக்கிறோம் என்கிறார்.

பல கூடல்களுக்கு முன், நளதமயந்தி கதை பற்றி கர்மயோகி கூறியவற்றை கூறியிருந்தேன். அதிலும் அதே போல யாருக்காக, எந்த உயர்ந்த மனப்பான்மைக்காக முடிவெடுக்க வேண்டும் என்பது தெரிந்தும் அதை செய்யாமல் கர்மத்தை அனுபவித்தவன் நலன். அதுவே தான் கர்ணனுக்கும், தான் செய்வது தவறு என்று தெரிந்தும், எது உயர்ந்தது என்று தெரிந்தும், அதை செய்யாததால், கர்மத்தை அனுபவித்தவன் கர்ணன். இதிகாசம், புராணம் முழுதும் இது போன்ற ஏராளமான கதைகள் உண்டு. பல ஆண்டு சாபத்தை ராமனிடம் வேண்டி ஒரே நொடியில் கழித்த அகலிகை போன்ற கதைகளும் உண்டு. இவையெல்லாம் எதை காட்டுகிறது என்றால் கர்மம், விதி, காலம், இடம், நேரம், போன்றவை பாதிக்காத தளம் ஒன்று உள்ளது என்பதைத் தான் இது காட்டுகிறது.

மனிதன் தான் விரும்பும் திறமைகளை வெளிப்படுத்தி அதற்கான பலன்களையே பெற விரும்புகிறான். அன்னை விரும்பும் திறமைகளை வெளிப்படுத்தினால், அந்த நிலைக்கான பலன் வரும் என்பதை அவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. வாழ்வு செயல்படும் முறை பற்றி, அதில் விதியின் தாக்கம் எப்படி வருகிறது என்று புரிய வேண்டும் என்றால் நம் செயல்பாடு நமக்குப் புரிய வேண்டும். எதன் மூலம் செயல்படுகிறோம் என்பது புரிய வேண்டும். உணர்வால், அறிவு என்று நினைக்கும் அனுபவத்தால், சமுதாயம் தந்த அறிவால், மற்றவர்களுக்காக என்றே பெரும்பாலும் எல்லாம் செய்யப்படுகிறது. ஆனால் ஆன்மாவின் மூலம் செயல்படுவது என்பது வாழ்வு செயல்படுவதற்கு எதிரானது. REVERSE PROCESS எனலாம். வாழ்க்கை பிரச்சினையைக் கொடுத்து, அதன் மூலம் ஒரு அனுபவ

சாரத்தை பெற வைத்து, அதன் மூலம் ஒரு அறிவைக் கொடுத்து, அதன் மூலம் அடுத்த முறை துன்பத்தை, அதே துன்பத்தை அனுபவிப்பதை தடுக்கிறது. ஆனால் ஆன்மா தேவையான அறிவை முன்பே கொண்டுள்ளது. அதன் படி நாம் செயல்படும் போது துன்பம் இல்லா ஆனந்தம் மட்டுமே கிடைக்கிறது. நமக்கு கர்மம் இருக்கிறது என்ற உணர்வே நமக்கு வருவதில்லை.

கர்மயோகி சொல்வது - நாம் கர்மத்தின் பிடியில் இருக்க விரும்பும் இடங்களை நம்மால் பார்க்க முடியும் என்கிறார். குறிப்பாக, பொய் சொல்லும், மறைக்கும் இடங்களை கவனித்தால் இது புரியும். பொழுது போகவில்லை என்று நினைக்கும் இடங்கள், எனக்கு இவ்வளவு தான் இதற்கு மேல் முடியாது, விதி விட்ட வழி, PREOCCUPATION , நட்பு வட்டம், TV, CINEMA, BAR வதந்தி அல்லது வெட்டி பேச்சுகள் போன்ற இடங்களை, நம்மை மறக்க நினைக்கும் இடங்கள், தனிமையைக் கண்டு பயப்படும் இடங்களை கவனித்தால், நாம் அப்படி இருப்பதை நாம் விரும்புவதைக் காட்டும், மாற விருப்பமில்லை, கர்மத்தின் பிடியே சுகமாக இருக்கிறது என்று இருப்பது புரியும். நம்மை சுற்றியுள்ளவர்கள் எல்லாம் ஆயிரம் விஷயங்கள் முன்னேற்றத்திற்காக செய்து கொண்டு இருக்கும் போது, நாம் எந்த முயற்சியும் எடுக்காமல், மனிதர்கள் மேல், சூழல் மேல், நாடு, அரசாங்கம், அதன் திட்டங்கள் , சட்டங்கள் ஆகியவற்றை குறை சொல்லிக் கொண்டு இருப்பது தெரியும். எந்த அளவிற்கு நாம் நம் சுபாவத்திற்கு கட்டுப்பட்டு விதி விட்ட வழி என்று கர்மத்திற்கு கட்டுப்படுகிறோம் என்பது சற்று சிந்தித்து பார்த்தால் புரியும்.

ஆரம்ப கூடல்களில் ஒரு டீச்சர் அன்பர் உதாரணம் பற்றி அடிக்கடி கூறுவேன். ஆறாயிரம் ரூபாய் சம்பளத்திற்கு மாம்பலத்தில் இருந்து அடையாறுக்கு சென்று 10 மணி நேரம் உழைப்பவருக்கு கல்கத்தாவில் 6 மணி நேர உழைப்புக்கு 30,000, 2010இல் கொடுத்து, இலவச இருப்பிடம் கொடுத்து அழைத்த போது, தென்னிந்திய உணவு வகைகள் அங்கு கிடைக்காது என்று அதை வேண்டாம் என்று சொல்லி கஷ்டப்பட்டாலும் இங்கு தான் இருப்பேன் என்றார். அன்னை முறைகளை பற்றி பலருக்கும் அறிவுரை கூறுபவர் அவர். அதோடு என் நண்பர் நல்ல வசதியானவர். அன்பர் வசதி குறைவானவர். அவரை திருமணம் செய்வதாக சொன்ன போது ஜாதியை காரணம் காட்டி மறுத்தார். பல வருடங்கள் கிட்டத்தட்ட நாற்பது வயது வரை திருமணம் ஆகாமல் இருந்தார். அன்னை எனக்கு எதுவும் செய்யவில்லை என்று சொல்லி அன்னையிடம் இருந்து விலகி விட்டார். இது வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு அவர் அன்னை அருளை விலக்கிய விதமும், கர்மத்தை விரும்பி ஏற்ற விதமும் நன்றாக் தெரியும்.

ஆனால் நாம் ஒவ்வொருவரும் அந்த மாதிரி பல விஷயங்களை, பல காரணங்களுக்காக  ஏற்றுக் கொள்வதில்லை. அல்லது ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை நம் வாழ்வை அதே கண்ணோட்டத்துடன் பார்த்தால், நம் முன்னேற்றத்தடைக்கான காரணம் புரியும். கர்மத்தை வெல்வது என்பது நாம் நம்மை வெல்வது. நாம் நம்மை வென்று, அன்னைக்குப் பரிசாக  தருவது நாம் விதியை வெல்வது. நம் ஏதோ ஒரு ஆர்வம், நோக்கம், ஆசை, GOALS AMBITIONS தான் நம் வாழ்வை நடத்திக் கொண்டு இருக்கும். அதற்கான PHYSICAL ENERGY LEVEL, ஆர்வத்திற்கான EMOTIONAL ENERGY LEVEL தான் நம் முன்னேற்றத்தை முடிவு செய்யும். அறியாமை, இயலாமை அனைத்தும் அங்கு உண்டு.

ஆனால் அன்னையை அழைக்கும் போது வரும் ஆன்மீக ஆற்றல் - SPIRITUAL ENERGY க்கு சக்தி, ஞானம் ஆகியவற்றுக்கு எல்லை என்பதே கிடையாது என்பதால் அது அனைத்தையும் உள்ளடக்கிய CAUSAL PLANE ஆக நம் வாழ்வின் காரண காரிய தளமாக மாறுகிறது. அங்கே கர்மம் செயல்பட முடியாது என்பதால் - நமக்கு துன்பம் என்பதே இருக்காது.

சென்ற கூடலில் சொன்ன அதே துபாய் வீடு உதாரணத்தை இங்கு பொருத்தி பார்த்தால் இது இன்னும் நன்றாக புரியும். அந்த ENGINEER உடைய சம்பளமில்லாமல் வேலை செய்யும் DEPRESSION தரும் குறைந்த ENERGY , அதனால் வரும் சோர்வினால் ஏற்படும் குறைந்த PHYSICAL ENERGY ஆகியவை கர்மம் வெளிப்பட உதவும் கருவிகள் என்றால், அவர் ஆன்மாவின் பண்புகளை எடுத்துக் கொண்டதால் வெளிப்பட்ட SPIRITUAL ENERGY , இரண்டு வருட காலத்தை ஆறு மாதமாக சுருக்கியது. அந்த அளவிற்கு அவர் கர்மத்தின் பிடியில் இருந்து வெளியே வந்தாரென்பது நன்றாகத் தெரிகிறது.

நம் பெரும்பாலோர் சுபாவம், மற்றவர்களை திருப்திப்படுத்துவது, சமூகத்தை திருப்திப்படுத்துவது. மற்றவர் என்ன நினைப்பார்களோ என்று செய்வது என்று தான் பல காரியங்களை செய்துக் கொண்டு இருப்போம். அதிலுள்ள அர்த்தமற்ற தன்மை, அபத்தம் நம் கண்ணில் படுவதேயில்லை.

உதாரணமாக நான் இருந்த ஒரு APARTMENT இல் முறைவாசல் என்று தினமும் ஒரு APARTMENT காரர், main வாசலில் தண்ணீர்  தெளித்து கோலம் போட வேண்டும். GROUND FLOOR , FIRST FLOOR இல் இருப்பவர்கள் செய்து விடுவார்கள். அதற்கு மேல் இருப்பவர்கள் முறை வரும் போது, காலையில் மேலிருந்து ஒரு MUG இல் கயிறு மூலம் தண்ணீர் வரும். அது அங்கே கவிழ்க்கப்படும். பின் கோலம் போடும் அந்த TEMPLATE DESIGN  துளைகள்

போடப்பட்டிருக்கும், அதில் கோலமாவு போட்டு அடுத்த கயிறு வந்து தரையை தட்டும். கோலம் என்று சொல்லுமளவிற்கு ஒரு DESIGN வரும் - முறை செய்ததாக, புண்ணியம் செய்ததாக சாஸ்திரப் படி எறும்புகளுக்கு உணவிட்டதாக ஒரு திருப்தி வேறு இருக்கும். அந்த கோலமாவை சாப்பிட்ட குருவியும், எறும்பும், சாபம் கொடுத்து இருக்கும் என்றே நினைக்கிறேன்.

இது போன்ற அர்த்தமற்ற முறைகளை உயர்ந்தது என்று பல இடங்களில் செய்து துன்பத்தில் மாட்டி கொள்ளும் இடங்களை கவனித்தால் தெரியும். நம் அறியாமை, சுபாவம் எந்த அளவிற்கு நம்மை கர்மத்தின் பிடியில் வைத்து இருக்கிறது என்று புரியும்.

எந்த இருவரும் ஒரே மாதிரியானவர் அல்ல. NO TWO PERSONS ARE SAME - என்னும் போது அவருக்காக செய்வது. அவரை போல செய்வது, அவரை கேட்டுச் செய்வது என்பது எல்லாம் சரியாக வராததற்கு காரணம், அவர் பெற்ற அதே பலனை நாம் பெற்றாததற்கு காரணம், அவர் ஆற்றல், திறமை, சூழல், அறிவு வேறு நம்முடையது வேறு. அதனால் தான் நம்மால் அதே பலனை பெற முடியவில்லை. ஆனால் ஆன்மாவின் பண்புகள் என்பது universal . நமக்கு என்று எடுத்துக் கொண்டால், அது அன்னை விரும்பும் பண்புகள். அது அனைவருக்கும் ஒரே பலனை தருவதை கண் கூடாக பார்த்து இருக்கிறோம். மூன்று நாள் பிரார்த்தனை, அன்னையுடன் அரை மணி நேரம், கடந்த கால சமர்ப்பணம் போன்றவை பலன் தராமல் இருந்ததே இல்லை. அப்படிப்பட்ட அன்னை பண்புகள் மேல் நமக்கு நம்பிக்கை வந்தால், நம் மேல் உள்ள கர்மத்தின் பிடி போகும். அதற்கு முதலில் கர்மம், விதி என்பனவற்றின் மேல் நமக்குள்ள நம்பிக்கை போக வேண்டும்.

அது செயல்படும் பாதையை அடைத்து விட்டால், கர்மத்தை வெல்லலாம் என்ற நம்பிக்கை வருவது. காரணம் என்னத் தான் சொன்னாலும் அது பற்றி நம்பிக்கை நம் geneகளிலேயே இருப்பதால், அவற்றை மீறுவதற்கு கடினமாகவே இருக்கிறது.

சிறு வயது முதலே இவற்றில் எல்லாம் எனக்கு கர்மம், விதி ஜாதகம் போன்றவற்றில் நம்பிக்கை இருந்ததில்லை. அன்னையிடம் வந்த பிறகு என் வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்களை கண்ட பிறகு அந்த நம்பிக்கை என்னிடம் கிடையாது என்றே நினைப்பேன். ஆனால், புது வருடம், சனி பெயர்ச்சி, குரு பெயர்ச்சி இணைப்புகள் வரும் போது அல்லது யாராவது பேசும் போது எனக்கு என்ன போட்டிருக்கிறது என்று பார்க்கும் ஆர்வம் எழதத்தான் செய்கிறது. காரணம் விதி, துரதிர்ஷ்டம், நேரம், ஜாதகம், எல்லாம் நம்மை

எச்சரிக்கை செய்ய ஏற்பட்டவை என்பதை மறந்து, அதுவே நம்மை வழி நடத்துகிறது என்ற பயத்திற்கு பல காரணங்களால் வந்து விட்டோம். ஆன்மா முன், அன்னை முன் இவையெல்லாம் பொருளற்றவை என்னும் முழு நம்பிக்கை வரும் போது, நாம் கர்மத்தின் பிடியில் இருந்து முழுதுமாக விடுபடுகிறோம்.

நம் எண்ணமே நம் வாழ்க்கை என்பதால், நம் எண்ணம், சித்தம் செயல்படாமல் அன்னை சித்தம் வெளிப்படும் படி நடந்தால் எந்த சூழலையும், ஆனந்தமாக மாற்ற முடியும். அதன் முதல் படி நல்லது கெட்டது என்பதை நம் நோக்கில் பார்க்காமல், அன்னையின் நோக்கில், உலகின் நோக்கில், கடமையின் நோக்கில் பார்த்தால்  வாழ்வின் போக்கை மாற்ற முடியும்.

உதாரணமாக கர்ணனும், பீஷ்மரும் உலகின் நோக்கில் பார்த்து செயல்பட்டு இருந்தால், மகாபாரதத்  போக்கே மாற்றப்பட்டு இருக்கும்.  அனைவருக்கும் ஆனந்தம் கிடைத்து இருக்கும்.

நாம் அனைவரும் PSYCHOLOGICAL SATISFACTION  - உணர்வின், உணர்ச்சிகளின் திருப்திக்காகவே  பெரும்பாலானவற்றை செய்கிறோம். கை தட்டலுக்கு, பாராட்டுகளுக்கு, அங்கீகாரத்திற்கு என்றே பெரும்பாலானவற்றை செய்கிறோம். ஆனால் குடும்பம் முதற்கொண்டு யாரையும் நம்மால் திருப்திப்படுத்த முடிவதில்லை.

ஒரு கடமைக்காக பண்பை எடுத்துக் கொண்டு செய்யும் போது அது ஏராளமானவர்களை திருப்திப்படுத்துகிறது. உதாரணமாக YAHOO க்கும், GOOGLE க்கும்இருக்கும் வித்தியாசம், NOKIASYMBION   , BLACKBERY க்கும் android க்கும் இருக்கும் வித்தியாசம், APPLE க்கும் WINDOWS க்கும் உள்ள வித்தியாசம் போன்றவற்றை பார்த்தால், வியாபார நோக்கத்தில் தான் செயல்படுகிறார்கள் என்றாலும், அதிலும் ஒரு சிறு பண்பை கொண்டு வந்தவர்கள் அடைந்த முன்னேற்றம் மிகப் பெரியது.

அது போல எந்த தாழ்ந்த, கடுமையான, துன்பமான சூழலிலும் நாம் பண்பை கொண்டு வருவது நம்மை அடுத்த கட்டத்திற்கு கொண்டு சென்று நம்மை மட்டுமல்லாமல் - நம்மை சுற்றி உள்ளவர்களையும் ஆனந்தமடைய செய்யும். கர்மயோகி கூறுவது - விட முடிவது பெற முடிவதை நிர்ணயிக்கும். பண்புகளை பற்றுவது ஆன்மாவைப் பற்றுவது என்று கூறுகிறார். எந்த முன்னேற்றத்திற்காக எதை விடுகிறோம் எந்த நம்பிக்கைக்காக, எந்த

நம்பிக்கையை விடுகிறோம். தேவைகள், ஆசைகள், வசதிகள், மனப்பான்மை, எண்ணங்கள், என்று நாம் விடும், மாறும் நிலைக்கு ஏற்ப நம் முன்னேற்றம் இருக்கும். நம் கர்மம் நம்மை பாதிக்காத தளத்தில் நாம் நிற்போம்.

கர்மம் பலிப்பது பற்று, ஆசை மூலமே என்று மரபு கூறுகிறது. அனைத்தையும் விலக்கி ஓடினால், கர்மத்தில் இருந்து தப்பி மோட்சம் பெறலாம் என்று கூறுகிறது. ஆனால் கர்மயோகி, நம் உணர்வின் மேல் பற்று இல்லாமல், அறிவின் மேல் பற்று இல்லாமல், உடலின் மேல் பற்று இல்லமால், அவற்றின் வழிக்கு செல்லாமல், ஒன்றை செய்வது பற்று அற்று இருப்பது என்கிறார். அப்படிப்பட்ட பற்று அற்று இருத்தல் என்பது மோட்சம் அல்ல. உயர்ந்ததை பற்றுவது அன்னையை பற்றுவது. காரணம் அந்த செயலை ஆன்மா மட்டுமே செய்ய முடியும். அது கர்மம் இல்லாத காரிய காரண தளம் என்பதால் துன்பம் இல்லாத ஆனந்த தளம்.

நம் அன்னை தான், நம் ஆன்மா தான் நம் மிகப் பெரிய பலம் என்பது புரியாமல், எதை எதையோ பலம் என்று நினைத்துக் கொண்டு இருக்கிறோம். சரியான வழியில் நடக்க விரும்புபவன் சரியான வழியை தேர்ந்து எடுக்கிறான். குறுக்கு வழியில் அடைய விரும்புபவன் குறுக்கு வழியை நாடுகிறான். அது போல ஆன்மாவின் வழி இருக்கும் போது வேறு வழிகளைத் தெடிக் கொண்டு இருக்கிறோம். உண்மையில் ஆனந்தத்திற்கு அது தான் குறுக்கு வழி என்பது புரியாமல் செய்துக் கொண்டு இருக்கிறோம். ஒரு பிரச்சனையை தீர்க்க நாம் எடுக்கும் பண்புகளின் அடிப்படையிலேயே நமக்கு பிரச்சினை தீர்வதில் இருந்து அது வாய்ப்பாக மாறும் வரை பல இடங்கள் நடக்கிறது.

எந்த நிலைக்கான சுபாவம் மாறுகிறதோ அந்த நிலைக்கு ஏற்ப வாழ்வு அபரிமிதத்தை தருகிறது.

ஒரு tourist இந்தியாவிற்கு வந்தால், நம் நாட்டு சட்டங்கள் ஓரளவு தெரிந்தால் போதும். வந்தது சுற்றி பார்க்க, அதை அனுபவிக்க என்றால் இது போதும்.

இன்னும் அதிகமாக பெற வேண்டும் என்றால், நம் பண்பாடு உணவு, பழக்கம், நடத்தை எல்லாம் அவருக்கு புரிய வேண்டும்.

அவர் வந்ததற்கு ஒரு நோக்கம் இருந்தால், கதை, ஆராய்ச்சி என வந்து இருந்தால் வரலாறு, பாரம்பரியம், சமுதாய சூழல், சட்டம் எல்லாம் தெரிய வேண்டும்.

அதற்கு ஏற்பவே பலன் கிடைக்கும். வந்த நோக்கம் செயல்பட்டதன் நோக்கம் நிறைவேறும். அவர் எதிரிபார்த்த ஆனந்தம் கிடைக்கும்.

அது போல கர்மத்தின் தாகத்திற்கு ஏற்ப, அதனால் நாம் படும் துன்பத்திற்கு ஏற்ப, நாம் ஆன்மாவின் பண்புகளை serious ஆக முடிந்த அளவு உயர்ந்த நிலையில் எடுத்துக் கொண்டால், அந்த நிலைக்கேற்ற ஆனந்தத்தை நாம் பெற முடியும்.

உதாரணமாக

A என்பவர் SINCERITY , HARDWORK என்று ஒரு கம்பெனிக்காக உழைக்கிறார்

B என்பவர் சுமுகம் , பிறர் நிலைப்பார்வை போன்றவற்றைப் பயன்படுத்தி தட்டிக் கொடுத்து வேலை வாங்குகிறார். ஒரு TEAM PLAYER ஆக உழைக்கிறார்

C - என்பவர் கம்பெனிக்காக, முதலாளி நன்றாக இருக்க வேண்டும் என்பது முதல் இந்த PRODUCT அனைவருக்கும் நல்ல முறையில் உபயோகப்பட வேண்டும் என்னும் நல்லெண்ணம், அக்கறையுடன் உழைக்கிறார்.

சில காலம் கழித்துப் பார்த்தால் –

A முதலாளி ஆகியிருப்பார் , B - தலைவர் ஆகியிருப்பார் , C - அந்த INDUSTRY வளர, நாடு வளர அல்லது அன்னையின் கருவியாக மாறி இருப்பார்.

இன்று சொன்ன அத்தனை உதாரணங்களையும் கவனித்தால் எல்லாவற்றுக்கும் பின்னால் ஒரு psychological dimension மனதின் பரிமாணம் இருப்பதை காணலாம் . அதுவே அனைத்தையும் முடிவு செய்கிறது என்பதை சிந்தித்து பார்த்தால் புரிந்துக் கொள்ள முடியும். அதையே Mother Diemsion ஆக மாற்றும் போது, நம் ஆன்மாவே நம் காரண காரிய தளமாக மாறுகிறது. கர்மத்தை கரைக்க, அது பலிக்கும் வாழ்வின் விதிகளை மாற்ற, சுருக்கமாக கர்மயோகி கூறும் வழிகள்

அன்னையின் பண்புகள் நிறைந்த - புற செயல்கள் செய்ய வேண்டும்.
அன்னையின் பண்புகள் நிறைந்த - அக உணர்வுகள் வளர வேண்டும்.
இந்த இரண்டும் இருந்தாலே நம்மை எந்த கர்மமும் பாதிக்காது.

அடுத்த கூடலில், பதினாறாவது அத்தியாயத்தை பற்றி பேசலாம்.

***********************************